மாற்றிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், பேரோடு ஊராட்சியில் இருக்கின்ற கால்நடைக் கிளை நிலையத்தை மருந்தகமாக மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சூரம்பட்டி பகுதி மாநகராட்சிப் பகுதியில் இருப்பதாலும், அங்கே ஒரு Super Speciality மருத்துவமனை இப்போது ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அதன் பயன்பாடு குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை கதிராம்பட்டி ஊராட்சி, கதிராம்பட்டிக்கு மாற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, ஈரோடு மாநகராட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களால், கடந்த ஆண்டு 24 மணி நேரமும் இயங்கக்கூடிய* Multi Speciality Hospital *ஒன்று துவக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சூரம்பட்டி பகுதியும் ஈரோடு மாநகராட்சிப் பகுதியில் வருகின்ற காரணத்தால், கதிராம்பட்டி ஊராட்சிக்கு கால்நடைக் கிளை நிலையத்தை மாற்றித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சூரம்பட்டி ஊராட்சியில் இருக்கின்ற அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை, கதிராம்பட்டி ஊராட்சிக்கு மாற்றுவதற்குண்டான ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***1410—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 12]

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூரிலுள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கீரனூர் அரசு மருத்துவமனை ஏற்கெனவே தாலுகா hospital ஆக, வட்ட மருத்துவமனையாக நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு 600 புற நோயாளிகள் வருகின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு, மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் மேலும் என்னென்ன கூடுதல் வசதிகள் வேண்டுமென்று விரும்புகிறார்களோ அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மருத்துவமனைகள் தமிழகத்திலே பல இடங்களிலே இருக்கின்றன. அவற்றினுடைய தரம் நிச்சயமாக உயர்த்தப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை நமது அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தரம் உயர்த்திய மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இல்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், சிவகங்கை மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு, இன்றைக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக இருக்கின்றது. இன்றைக்கு அதிலே இருந்த தலைமை மருத்துவர்கள் யாரும் இல்லாத நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதைக் கவனித்து, அதற்குரிய மருத்துவர்களை நியமனம் செய்து தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2019 ஜூலை 12

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டுமென்று சொன்னார்கள். பொதுவாக, தமிழ்நாடு முழுக்க மிக வேகமாக மருத்துவர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் MRB என்று சொல்லக்கூடிய, மருத்துவப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியிருக்கிறார்கள். We are not depending on TNPSC. TNPSC மூலம் இல்லாமல், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கே direct ஆக recruitment செய்கின்றோம். கடந்த வாரம் 584 MBBS மருத்துவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கரங்களால் பணி நியமன ஆணைகளை வழங்கி, அவர்கள் பணியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். PG மருத்துவர்களைப் பொறுத்தவரைக்கும், ஒவ்வோர் ஆண்டும் PG முடித்துவிட்டு மருத்துவர்கள் வருவார்கள். இப்போது அவர்கள் Service PG. Non service PG–யை பொறுத்தவரைக்கும், இரண்டு ஆண்டுகள் அரசுப் பணியாற்ற வேண்டுமென்று ஒப்பந்தம் இருக்கின்றது. நீங்கள் சொன்னது, இந்த DMS side. அவர்கள் எல்லோருமே என்ன நினைக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் MD., MS., முடித்துவிட்டு வந்தவுடனே மருத்துவக் கல்வித் துறையைத்தான் prefer செய்கிறார்கள். எங்களுக்கு சென்னை மருத்துவக் கல்லூரி வேண்டும், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி வேண்டும், சேலம் மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்த ஆண்டு நாம் special ஆக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, பொதுவாக மக்கள் நலனில் அக்கறை கொண்டு, காரைக்குடி, ஆலங்குடி, ஈரோடு, கொடுமுடி மற்றும் சத்தியமங்கலம் போன்ற மருத்துவமனைகளுக்கு மட்டும்தான் அவர்களைப் போட வேண்டுமென்று சிறப்பு உத்தரவு பெற்று, இப்போது 600 பேரை DMS side நாம் பணி நியமனம் செய்திருக்கிறோம். அவர்கள் பணியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, non service PG. அவர்களையும் இப்போது பணி நியமனம் செய்யப் போகிறோம். ஆகையால், தொடர்ந்து பணி நியமனங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையில் நடந்து கொண்டிருக்கின்றன. இதுவரைக்கும் MRB–மூலம் 27,274 பேரை பணி நியமனம் செய்திருக்கின்றோம். இன்னும், நீங்கள் எங்கெல்லாம் காலிப் பணியிடங்களைக் குறிப்பிடுகின்றீர்களோ, அங்கெல்லாம் பணி நியமனங்கள் செய்ய இருக்கின்றோம். ஒவ்வோர் ஆண்டும்

2019 ஜூலை 12]

இது தொடர்ந்து கொண்டிருக்கும். ஏனென்றால், MBBS *முடித்தவர்கள்* PG*–க்காக போய்விடுவார்கள். அந்த ஒரு வாரம், 10 நாட்கள் அங்கு* gap *இருக்கும்.* PG *முடித்தவர்கள்* Super Speciality*–க்கு போய்விடுவார்கள். அந்த நேரத்திலும்* gap *இருக்கும். ஒவ்வோர் ஆண்டும் இந்த மருத்துவத் துறைக்கு இதுவொரு பெரிய சவாலாக இருக்கிறது. இருந்தாலும், அந்தச் சவாலை சரியாக எதிர்கொண்டு, மக்கள் நலன் கருதி, எங்கேயும் நோயாளிகள் பாதிக்காத அளவுக்கு மருத்துவமனைகளில் அந்த நியமனங்களை நாம் செய்து கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைக் கருத்தில்கொண்டு, இன்னும் வேகமாக அந்தப் பணிகள் நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

முற்பகல் 10–35

திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் ஒன்றியத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தேர்தல் பரப்புரைக்கு வந்த நேரத்தில், கீழையூரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்று வாக்குறுதி அளித்ததாக அங்குள்ள பொதுமக்கள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியை உறுதிப்படுத்தக்கூடிய அளவிற்கு நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, உரையை நிறைவு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஆய்வு செய்து, அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன் அவர்கள்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எங்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறையில் நல்லாட்சி புரிந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எனது ஆம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பேர்ணாம்பட்டு, மாதனூர், ஆலங்காயம் ஊராட்சிகளுக்கு வரிவுபடுத்த வேண்டும். இந்த ஊராட்சிகளிலுள்ள மக்கள் குடிநீருக்காக மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதாலும், அந்தப் பகுதியிலுள்ள தண்ணீர் உப்புத் தன்மையுடன் இருப்பதாலும், நடப்பு நிதியாண்டில் அதற்கு முன்னுரிமை தந்து ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

அதேபோன்று, எனது ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட ஆம்பூர் நகரில் உள்ள இஸ்லாமிய பள்ளிகளில் உருது பாடப் புத்தகங்கள் மட்டும் வழங்கப்படவில்லை என தெரிய வந்துள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை வழங்க. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வில்வநாதன், நீங்கள் புது உறுப்பினர். அதனால்தான் உங்களை நான் allow செய்தேன். (குறுக்கீடு) இல்லை, கேள்வி நேரத்திலே நீங்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தமானதைத்தான் கேட்க வேண்டும். மற்ற நேரங்களில் வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு ஆட்சேபணை இல்லை. நீங்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தமாகக் கேள்வி கேளுங்கள்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரத்திலுள்ள அரசு மருத்துவமனையைப் பற்றி நான் ஏற்கெனவே எனது கன்னிப் பேச்சில் குறிப்பிட்டுள்ளேன். எனவே, ஆம்பூர் அரசு மருத்துவமனையில் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னிப் பேச்சில் பேசிய குறிப்பு என்னிடம் இருக்கிறது. ஆம்பூர், வாணியம்பாடி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், ஊட்டி, கொல்லிமலை, குன்னூர் போன்ற இதுவரை மருத்துவர்கள் நியமனம் செய்யப்படாத எல்லா மருத்துவமனைகளுக்கும் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பணியில் சேர்வதற்கு, அவர்களுக்கு as per rules 30 நாட்கள் கால அவகாசம் இருக்கின்றது. அந்த 30 நாட்களுக்குள் நீங்கள் குறிப்பிட்ட ஆம்பூர் மருத்துவமனையில் மருத்துவர்கள் பணியாற்றத் தொடங்குவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களுடைய உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட கோரிக்கையை எங்களுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலிப்பார் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன் அவர்கள்.

திரு. S. காத்தவராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். உலகமெல்லாம் பரவிக் கிடக்கின்ற தமிழ் இளைஞர்களுடைய எழுச்சி நாயகன், எங்களுடைய கழகத் தலைவர் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன்.

என்னுடைய குடியாத்தம் தொகுதியில் பேர்ணாம்பட்டு மற்றும் குடியாத்தம் ஆகிய 2 தாலுகாக்கள் உள்ளன. பேர்ணாம்பட்டு தாலுகா உருவாக்கப்பட்டு 3 ஆண்டுகளாகின்றன. ஆனாலும், அங்கே இருக்கக்கூடிய பொது மருத்துவமனை இன்னும் தாலுகா அளவில் இல்லாமல் 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனையாகத்தான் இருக்கின்றது. சுற்றியிருக்கக்கூடிய கிராம மற்றும் நகரப் பகுதிகளிலுள்ள மக்களுக்குப் போதுமான

அளவிற்கு அந்த மருத்துவமனையில் வசதிகள் இல்லை. அந்தத் தாலுகா Headquarters–ல் 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனை நிச்சயமாக இருக்க வேண்டும். அதனால் தாலுகா அளவில் அந்தக் கிராம மற்றும் நகரப் பகுதி மக்கள் நன்கு சுகாதாரமாக இருப்பதற்கு, 24 மணிநேரமும் செயல்படுகின்ற 60 படுக்கை வசதிகள்கொண்ட மருத்துவமனையாக தாலுகா மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெல்லாம் வருவாய்த் துறை சார்பில் தாலுகாக்கள் உருவாக்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் இருக்கக்கூடிய மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படவேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கொள்கை. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவோடு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

வட்டாட்சியர் அலுவலகம்

***24886—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—